தரம் 12,13

கம்பராமாயணம்- குகப்படலம்



தமிழ்

கம்பராமாயணம் குகப்படலம்

Mr. N. Kugaparan
NP/J/ Pandaththarippu Girls High School, Jaffna

# கம்பராமாயணம்



- வடமொழியில் வான்மீகி முனிவர் எழுதிய இராமாயணத்தைத் தழுவி கம்பரால் எழுதப்பெற்ற காவியம் கம்பராமாயணம் ஆகும்.
- கம்பராமாயணத்தில் பாலகாண்டம், அயோத்தியகாண்டம், ஆரண்ய காண்டம், கிட்கிந்தாக்காண்டம், சுந்தரகாண்டம், யுத்தகாண்டம் என ஆறுகாண்டங்கள் உள்ளன.
- விருத்தப்பாக்களைக் கொண்டமைந்த கம்பராமாயணம் தமிழ்க்காப்பிய மரபில் தன்னிகரற்ற இடத்தைப் பெற்றுள்ளது.

# கம்பராமாயணம் குகப்படலத்துக்கு முன்பதான கதைச்சுருக்கம்



- நீண்டகாலமாக வாரிசு கிடைக்காமையால் வருந்திய தசரதச்சக்கரவர்த்தி ரிஷிசிருங்க முனிவரின் யாகத்தின் பயனாக புத்திரப்பேற்றினைப் பெற்றான்.
- தசரதனின் முதற்றேவியான கோசலைக்கு இராமனும், கைகேயிக்கு பரதனும், சுமித்திரைக்கு இலக்குவனும், சத்துருக்கனும் புத்திரர்களாவர்.
- தசரதச்சக்கரவர்த்தி தனது முதற்புதல்வனான இராமனை அரியணை ஏற்ற விரும்பினான்.



- இராமன் மீது கொண்டிருந்த முன்விரோதம் காரணமாக மந்திரை எனும் சூர்ப்பனகை கைகேயியின் மனதை மாற்றினாள்.
- இதன் விளைவாக ஏலவே தசரதன் கைகேயியிக்கு வழங்கிய வரங்கள் இரண்டினைப் பயன்படுத்தி இராமனுக்கு கிடைக்க வேண்டிய ஆட்சி உரிமையை தன்மகனான பரதனுக்கு கிடைக்க கைகேயி வழிசெய்ததோடு இராமனைப் பதினான்கு ஆண்டுகள் காட்டில் செல்வதற்குமான உத்தரவையும் வலிந்து பெற்றாள்.



- கைகேயி மூலம் தான் காடேகவேண்டியமையை அறிந்த இராமன் சீதையோடும் தம்பி இலக்குவனோடும் புறப்பட்டு குகனின் உதவியோடு கங்கையைக் கடந்தான்.
- இராமன் காடேகிய துயரில் தசரதச்சக்கரவர்த்தி உயிர்துறந்தான்.
- கேகேய நாட்டில் இருந்து மீண்ட பரதன் நடந்தவற்றை அறிந்து பெருந்துயருற்று இராமனை மீளவும் நாட்டிற்கு அழைத்துவரும் நோக்கோடு படைகள் சூழ சுற்றத்தினருடன் புறப்பட்டான்.

- குகப்படலம் பாடப்பகுதி (1-13பாடல்கள்)
- 1 தொடக்கம் 5 வரையான பாடல்கள்
- பரதனின் இயல்பு, யானைகள், குதிரைகள், உள்ளிட்ட பரத படைகளின் பெருக்கத்தை விபரிக்கின்றன.
- 6 தொடக்கம் 13 வரையான பாடல்கள் குகனின் சீற்றம், போர்ஆயத்தம் என்பவற்றை எடுத்துக்காட்டுகின்றன.

- **பரதனின் பெருமை**
- இராமனைத் மீளவும் நாட்டிற்கு அழைத்துச் சென்றுவிட வேண்டும் என்ற தவிப்பு
- அழகு மிக்கதும் பொன்னால் செய்யப்பெற்றதுமான வீரக்கழலை அணிந்தவன். 'பூவிரி பொலன் கழல்"
- ஒப்பற்ற சேனையை உடையவன். "பொருஇல் தானையான்" எனக் கம்பர் பரதனைச் சிறப்பித்துள்ளார்.



- ***யானைப்படையின் சிறப்பு***

- *பரதனது சேனையில் பெரும் எண்ணிக்கையிலான யானைகள் இடம்பெற்றிருந்தன. "அண்ணல் வெங்கரி"*

- *கொடிய யானைகளினது மதநீர்ப்பெருக்காகிய அருவி எல்லா இடங்களிலும் பாய்ந்தது.*
- *யானைகளின் மதநீரால் கங்கையானது வண்டுகளுக்கு அன்றிப் பிறருக்குக் குடிக்கவும் நீராடவும் உரிமையற்றதானது.*



# குதிரைகளின் சிறப்பு

- குதிரைகளின் பாதங்களால் எழுந்த தூசி " தேவர் தம்முடிமிசை படர்ந்ததோர் முறைமை தேர்ந்திலென்"

- குதிரைகளில் பல நெடுமூச்சோடு நீரைப்பருகின. வேறு பல நீந்தின. ஏனையவை "பொடிமிசை புரண்டன"



# படைகளின் பெருக்கம்

- பாலை ஒத்த கங்கையின் நீர்ப்பெருக்கானது தான் முன்பு சேர்கின்ற ஆரவாரம் பொருந்திய நீண்ட கடலினை சென்று அடையவில்லை. ஏனெனில் பரதனது படைகள் அக்கங்கை நீரைக் குடித்து நிறைத்துவிட்டன.



- “ஆன்றவர் உணர்த்திய அக்குரோணிகள் மூன்று பத்து ஆயிரத்து இரட்டி முற்றுமே” -அறுபதினாயிரம் அக்கிரோணிசேனைகள் பரதனின் படைகளில் இடம்பெற்றிருந்தன




## குகனின் சீற்றத்துக்கான காரணம்

- பரதனது பெருஞ்சேனையைக் கண்ணுற்ற குகன் “நீரைச் சுமந்த மேகத்தை ஒப்புடை அண்ணலோடு உடற்ற ஏ கொல் ஆம்” இப்படை எடுத்தது என்று எண்ணி சீற்றமுற்றான்.



- **சீற்றமுற்ற குகனின் மெய்ப்பாடுகளும் போராயத்தமும்**



- குகன், இயமனை நிகர்த்த பேராற்றல் உடைய வேடர் தலைவன்.
- "நகை மிக கண்களில் தீ நாற" என இகழ்ச்சி சிரிப்புடனும் கண்களில் இருந்து தீ வெளிப்படவும் நின்றான்.
- அகத்தில் மூண்ட சினம் மூக்கின் வழியாய் புகையாக வெளிவந்தது.



வளைந்த புருவமாகிய போர்வில்லை உடையவன்.

முக்கிளை பிரியும் சூலத்தைத் தாங்கிய யமனே ஐந்து லட்சம் உருவம் தாங்கிய உடம்பினை உடைய சேனைகளைக் கொண்டவனாய் போருக்குத் தயாரானான்.

- "கட்டிய சுரிகையன் கடித்த வாயினன்"
- "வெட்டிய மொழியினை" உடையவனாய் விழித்துப்பார்க்கும் போது கண்களில் நெருப்புத்தன்மை உடையவன்
- போர் அருகினில் வந்துவிட்டது எனக் கருதி மகிழ்ச்சியில் பூரிக்கும் தோளை உடையவன் "கிளரும் தோளினன்".
- ஆற்றல் குறித்த நம்பிக்கை " எலி எலாம் இப்படை அரவம் யான்"

## குகனது சேனையின் ஆற்றல்

- குகன் பெரும் சேனையை உடையவன். “ ஐ ஐநூறாயிரம் உருவம் ஆயின மெய் உறு தானையான்”

- குகனின் படைஆற்றல் “வலி உலாம் உலகினில் வாழும் வள்ளுகிர்ப் புலி எலாம் ஒரு வழிப் புகுந்த போல”

- ஊழிக்காலத்தில் இடியோடு மேகமும் கரிய கடலும் மிக்கு எழுந்தது போல “அசனி மாமழை கருங்கடல் கிளர்ந்தென” குகனின் படைதிரண்டமை



## உயர்வுநவிற்சி அணி

- படைகளில் இடம்பெற்றிருந்த யானைகளின் பெருக்கம். "வெங்கரி மதத்து அருவி பாய்தலால் உண்ணவும் குடையவும் உரித்து அன்று ஆயது"
- குதிரைகள் நடக்கும்போது எழுந்த புழுதியானது "தேவர் தம்முடியுறப்பரந்தது" பற்றி அறியவில்லை.
- பரத சேனைகள் கங்கை நீரைக் குடித்து முடித்தமையால் அக்கங்கை நீர் கடலில் சென்று கலக்கவில்லை. "பண்டு தான் படர் ஓலை ஏய் நெடுங்கடல் ஓடிற்று இல்லையால்"

## உருவக அணி

- யானையின் மதநீர் " வெங்கரி மதத்து அருவி" என உருவகிக்கப்பட்டுள்ளது.

- பரதசேனையை விபரிக்கும் போது "சேனையாம் வேலை"

- குகனின் வீரத்தையும் தன்னம்பிக்கையையும் எடுத்துக்காட்டும்போது "எலி எலாம் இப்படை அரவம் யான்". பரதனின் படைகள் எலிகளாகவும் தன்னை பாம்பாகவும் குகன் கருதினான்.

எலி எலாம் இப்படை அரவம் யான் என
ஒலி உலாம் சேனையை உவந்து கூயினான்
வலி உலாம் உலகினில் வாழும் வள் உகிர்ப்
புலி எலாம் ஒரு வழிப் புகுந்த போலவே

1. இச்செய்யுள் இடம்பெறும் சந்தர்ப்பத்தினை விளக்குக.
2. குகன் தனது ஆற்றல் மீது கொண்டிருந்த நம்பிக்கை எவ்வாறு விபரிக்கப்பட்டுள்ளது?
3. இச்செய்யுளில் கையாளப்பட்டுள்ள உவமை அணியின் முக்கியத்துவத்தை விளக்குக

*1. இராமனை மீள அழைத்துச்செல்லும் நோக்கோடு சுற்றமும் படைகளும் சூழ கங்கையின் வடகரைவந்தடைந்த பரதனையும் படைகளையும் கண்டு இராமனை எதிர்த்து போர் செய்ய படைவந்திருப்பதாகக் கருதி சீற்றமுற்ற குகன் யுத்தத்தை மேற்கொள்ளும் நோக்கோடு தன்னாற்றலை வெளிப்படுத்துவதாக இப்பாடல் அமைந்துள்ளது.*

*2. தன் எதிர்நிற்கும் பரதபடைகள் எலிகள் என்றும் தான் அரவம் எனவும் கருதியுள்ளமையில் இருந்து குகன் தனது ஆற்றல் மீது கொண்டிருந்த நம்பிக்கை வெளிப்படுகிறது.*

•

3. குகனது சேனையின் ஆற்றலை வெளிப்படுத்த “வள்ளுகிர்ப் புலிஎலாம் ஒருவழிப்புகுந்த போல” என்ற உவமை பயன்படுத்தப்பட்டுள்ளது. இங்கு உவமானம்- கூரிய நகங்களை உடைய புலிகள்

உவமேயம்- குகனது சேனைகள்

பொதுத்தன்மை- வீர ஆற்றல்

- "பொடிமிசை புரண்டன புரவி ஈட்டமே" இங்கு புரவி என்பது

*1.யானை* *2. குதிரை* *3. வண்டு* *4. கடல்*

**விடை: 2. குதிரை**

- "வஞ்சனையால் அரசு எய்திய மன்னர்" எனக் குறிப்பிடப்படுபவன்

*1.சத்துருக்கன்* *2. பரதன்* *3.தசரதன்* *4.இராமன்*

**விடை: பரதன்**

- “புருவப் போர்வில்லான்” என்பதில் இடம்பெற்றுள்ள அணி

*1.* உருவகம் *2.* உவமை *3.* தற்குறிப்பேற்றம் *4.* தன்மை நவிற்சி

விடை: உருவகம்

- “அசனி மாமழை” என்பதில் அசனி என்பதன் பொருள்

*1)* மேகம் *2)* மின்னல் *3)* மழை *4)* இடி

விடை: இடி

- “கூற்றின் ஆற்றலான்” என்பதில் கூற்று என்பதன் கருத்து

1)படை 2)இயமன் 3)சூரியன் 4)வீரம்

விடை: இயமன்

“பொருஇல்தானையான்” இங்கு தானை என்பதன் பொருள்

1)சலங்கை 2)சேனை 3)ஆயுதம் 4)உறவு

விடை: 2)சேனை

- “கழனி நாடு ஒரீஇ” என்பதில் கழனி நாடு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது

1)மிதிலை 2)சேரநாடு 3)கோசலநாடு 4)இலங்காபுரி

விடை:3)கோசலநாடு

- “வெங்கரி மதத்து அருவி” இங்கு கரி என்பதன் பொருள்

1)கடல் 2) யானை 3) குதிரை 4) வண்டு

விடை:2) யானை

- “ஓலைஏய் நெடுங்கடல்” என்பதில் ஓலை என்பதன் கருத்து
- *1)தொன்மை 2) வெள்ளை 3)ஆரவாரம் 4)பெரிய*

*விடை:3)ஆரவாரம்*

- “நெடிதுயிர்த்து உண்டவும்” நெடிதுயிர்த்து என்பதன் பொருள்

*1) பெருமூச்சுவிடுதல் 2) நீந்துதல் 3) புரளுதல் 4) சினமுறல்*

*விடை:1)பெருமூச்சுவிடுதல்*

- உவமானங்களுக்கு உரிய உவமேயங்களை இனங்காண்க

- பாலைஏய் நிறம்
- நீர் சுமந்த மேகம்
- கழனி நாடு
- வள்உகிர்ப்புலி எலாம் ஒருவழி புகுந்தது
- கூற்றின் ஆற்றலான்

குகன்

கோசலநாடு

கங்கையின் தன்மை

இராமன்

குகனின் சேனைகள்

- ஒரு சொல்லில் விடைதருக

- தாவர சங்கமம் யாவும் இரங்கிட கங்கைக் கரையை வந்தடைந்தவன் யார்?
- பரதன்

- கங்கையில் மதநீர் கலந்ததற்கு காரணமானவை யாவை?
- யானைகள்

- தேவர்களின் சிரசு வரை சென்று படிந்ததாக கருதப்பட்டது எது?
- தூசி

- நெடிதுயிர்த்து நீந்தி பொடிமிசை புரண்டன எவை?
- குதிரைகள்

- மேல்வரும் கூற்றுகள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் குறிப்பிடுக

- தாவரம் என்பது நிலையியற் பொருளாகும் (சரி)
- பரதனது படையில் முப்பதினாயிரம் அக்கிரோணி சேனைகள் இடம்பெற்றிருந்தன. (பிழை)
- "துப்புடைக் கடலின் நீர்சுமந்த மேகம்" எனக் குறிப்பிடப்பட்டவன் இராமன் ஆவான். (சரி)
- "எலி எலாம் இப்படை" என்பதில் உவமை அணி இடம்பெற்றுள்ளது. (பிழை)

- தொடர்புபடுத்துக

| | |
|---|---|
| கான்தலை நண்ணிய காளை | சேனை |
| ஆன்றவர் | வேடர் |
| உம்பர் | இராமன் |
| அக்கிரோணி | சான்றோர் |
| புளிஞர் | தேவர் |

கான்தலை நண்ணிய காளை → இராமன்
ஆன்றவர் → சான்றோர்
உம்பர் → தேவர்
அக்கிரோணி → சேனை
புளிஞர் → வேடர்